# இருதயக் கோளாறைச் சரிசெய்தல்

*உங்கள் கை முட்டியை மடக்கிப் பாருங்கள். கை முட்டி யின் அளவுக்கு குழிவான ஒரு சதையானது நமது மார்புப் பகுதி யின் ஆழத்தில் உள்ளது: இது 5 1/2க்கு 3 1/2க்கு 2 1/2 அங்குலங் கள் அளவுள்ளது. ஆண்களுக்கு இது சுமார் பதினோறு அவுன்ஸ் எடையும், பெண்களுக்கு இது சுமார் ஒன்பது அவுன்ஸ் எடையும் உள்ளதாயிருக்கும். இது நிலைத்த சுறுசுறுப்புடன் உள்ளது. சுமார் 5 குவார்ட் இரத்தத்தை இது உடல் முழுவதி லும் எல்லா வேளைகளிலும் பீய்ச்சிக் கொண்டேயிருக்கின்றது. ஒருவர் விழித்திருந்தாலும், உறங்கினாலும் நாள் ஒன்றுக்கு இது நூறாயிரம் முறைகளுக்கு மேலாகத் துடித்துக் கொண்டிருக் கின்றது. இது நூறாயிரம் மைல்கள் நீளமுள்ள குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளது - இக்குழாய்கள் சத்துக்களையும், உயிர்க்காற்றையும் உடல் முழுவதிற்கும் எடுத்துச் சென்று, கழிவுகளை நீக்கி, இவ்விதமாக உடலானது, உயிருடனும், கவனத்துடனும் இருக்கும்படி பாதுகாக்கின்றன. இது (இருதயம்) ஒருபொழுதும் ஓய்வு கொள்வதில்லை. ஒருவர் பிறக்கு முன்பு தொடங்கி அவர் இறக்கும் நேரம் வரைக்கும் இவ்வுறுப்பானது மருத்துவர்களால் தொடர்ந்து கண்காணிக்கப் படுகின்றது. நான் இயல்பான (சரீர) வாழ்க்கையின் மையப் பகுதியான இருதயத்தைப் பற்றித்தான் பேசுகின்றேன்.*

*சரீர ஆரோக்கியத்திற்கு மாம்ச இருதயம் எவ்விதம் மையமாக உள்ளதோ, அவ்விதமாகவே, ஆவிக்குரிய இருதய மானது ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு மையமாக உள்ளது. (இப்பாடமானது பல வருடங்களுக்கு முன்பு சார்லஸ் ஸ்வின்டால் அவர்கள் வானொலி மூலமாகப் பிரசங்கிக்கப் பட்ட ஒரு பிரசங்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.) ஆவிக்குரிய இருதயமானது காணப்பட முடியாதது ஆகும். அதைக்கையில் பிடித்திருக்க முடிந்தாலும், அதை நீங்கள் காண முடியாது. மிகத் திறமை வாய்ந்த அறுவைச் சிகிச்சையாளரிடம்*

*கூட இதைத் தொடக் கூடிய அறுவைக் கத்தியில்லை. இருந் தாலும், இயல்பான (சரீர) இருதயமானது எப்படி மருத்துவரின் நிலையான கவனத்திற்குள்ளாகின்றதோ, அது போலவே, ஆவிக்குரிய இருதயமும் தேவனுடைய நிலையான கவனத்திற் குள்ளாகின்றது. இருதயத்தின் போக்கின்படியாகவே தேவனு டன் அத்தனி நபரின் நடையும் உள்ளது.*

## ஆவிக்குரிய இருதயத்தின் விவரிப்பு

*இருதயமானது தேவனுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? என்னிடத்தில் இருப்பதிலேயே மிகவும் பெரிய புத்தகம், Young's Analytical Concordance to the Bible என்பதன் ஒரு பிரதியாகும். இதில் எல்லாம் தெளிவாக, விபரமாக, விளக்க மாக விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையும் இதில் அகரவரிசையில் உள்ளது. அது பல பத்தி களாய்ப் பிரிக்கப்பட்ட பெரிய பக்கங்களையுடையதும், படிப் பதற்கு உருப்பெருக்கும் கண்ணாடி தேவைப்படும் அளவுக்குச் சிறிய எழுத்துக்களில் அச்சிடப் பட்டதுமாய் இருக்கின்றது. இந்தப் புத்தகத்தில், "இருதயம்" என்ற வார்த்தைக்கு மூன்று முழுப் பக்கங்களில் ஆயிரத்திற்கும் அதிகமான குறிப்புகள் தரப்பட்டுள்ளன!*

*நான் விரும்புவதை மிகவும் அழகாக விளக்கும் அக்குறிப் பொன்றை நாம் காண்போம்:*

> *கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார் (1 சாமு. 16:7).*

*ஆங்கிலத்தில் "appearance" என்று மொழிபெயர்க்கப் பட்ட எபிரெய வார்த்தையானது "முகம்" என்று நேரடி அர்த்தம் கொண்டதாகும் (தமிழில் இது "முகம்" என்றே உள்ளது). வெளிப்புறத்தைப் பார்க்க வேண்டாம் என்று கர்த்தர் சாமுவேலுக்குக் கூறினார். மனிதர்கள் மேலோட்டத்தின்படி, தீர்ப்புச் செய்கின்றார்கள், ஆனால் "கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" - அது காணப்படாததாக, தொட்டறிய முடியாத*

தாக, நம்முடைய இருப்பின் மையமாக விளங்குகின்றது. இவ்விடத்தில்தான் நாம் எதை விரும்பி, எதை வெறுக்கின்றோம், அவரில் கொண்டுள்ள நமது ஆர்வங்கள் அல்லது ஆர்வக்குறைவுள்ளவைகள், நாம் உண்மையானவர்களா அல்லவா என்பது போன்ற எல்லாவற்றையும் அவர் காண முடியும்.

ஆரோக்கியமான இருதயங்கள் வேதவசனங்களில் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன: நேர்மையான இருதயங்கள், சுத்த இருதயங்கள், இரக்கமுள்ள இருதயங்கள், புகழ்ச்சியுள்ள இருதயங்கள், மருந்து போல நலம் தரும் சந்தோஷமுள்ள இருதயங்கள், மகிழ்ச்சி நிறைந்த இருதயங்கள், ஞானம் உள்ள இருதயங்கள், ஆயத்தமான இருதயங்கள் மற்றும் பிற வியாதிப்பட்ட இருதயங்களுக்கு, கடினமான, இணக்கமற்ற, பிரிந்து நிற்கின்ற, வஞ்சகமான மற்றும் மேட்டிமையான என்ற பட்டப்பெயர்கள் சூட்டப்படுகின்றன. வியாதிப்பட்ட இருதயமானது அதன் மிக மோசமான நிலையில் குருடு எனப்படுகின்றது.

"இருதயம்" என்ற வார்த்தை பற்றிய சுருக்கமானதொரு படிப்பானது, நமது பாடம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் காண்பிக்க முடியும். எபிரெய மொழியில் "இருதயம்" என்ற வார்த்தை *lebab* எனப்படுகின்றது: Robert Girdlestone அவர்கள், *Synonyms of the Old Testament* என்ற நூலில் இவ்வார்த்தையைப் பற்றி விவாதித்துள்ளார்:

> [இருதயமானது] நோக்கங்கள், உணர்வுகள், பாசங்கள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதோடு இருந்து விடமால், சித்தம், குறிக்கோள்கள், கொள்கைகள், சிந்தனைகள் மற்றும் புத்திக் கூர்மை ஆகியவற்றையும் உள்ளடக்கியிருக்கின்றது. உண்மையில் இது முழுமையான உள்ளான மனுஷனைத் தழுவியுள்ளதாகவும், இருக்கின்றது. தலையானது புத்திக் கூர்மையின் இருக்கையாக ஒருபொழுதும் கருதப்பட்டதில்லை. இருதயமே அவ்வாறு கருதப்படுகின்றது. இருதயமானது எல்லாச் செயல்பாட்டிற்கும் மூல காரணமாகவும், எல்லா சிந்தனை மற்றும் உணர்வு இவைகளின் மையமாகவும் இருக்கும் அதே வேளையில், வெளி உலகம் மற்றும் தேவன் ஆகியோரிடமிருந்து எல்லாச் செல்வாக்கையும் பெறுகின்ற ஒன்றாகவும் விவரிக்கப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டில் இதன் (இருதயம் என்பதற்கான) இணைச் சொல் *kardia* என்பதாகும். இதிலிருந்தே நாம் "cardiologist," "cardiac arrest" மற்றும் "cardiogram" என்ற வார்த்தைகளைப் பெற்றுள்ளோம். Kittel அவர்கள் ஒன்பது தொகுதிகளில் எழுதிய தமது *Theological Dictionary of the New Testament* என்ற நூலில், *kardia* என்ற வார்த்தையின் அர்த்தத்தை ஆராய்ந்து கண்டறிந்த பிறகு பின்வருமாறு குறிப்பிட்டார்:

> மனிதருடைய உள்ளான வாழ்வின் மையமாகவும் ஆத்துமா மற்றும் ஆவியின் சக்திகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலாதாரம் அல்லது இருப்பிடமாகவும் உள்ள இருதயமானது புதிய ஏற்பாட்டில் பல வித்தியாசமான வழிமுறைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அ. உணரும் திறன் மற்றும் உணர்வுகள், விருப்பங்கள் மற்றும் மிகையான உணர்வுகள் ஆகியவை இருதயத்தில் தங்கியுள்ளன. மகிழ்ச்சி, … வலி மற்றும் வருத்தம், … அன்பு, … விருப்பம் … ஆ. இருதயமானது புரிந்து கொள்ளுதலின் இருப்பிடமாகவும், எண்ணம் மற்றும் ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றின் மூலாதாரமாகவும் உள்ளது … இ. சித்தத்தின் இருப்பிடமாகவும், தீர்மானித்தலின் மூலாதாரமுமாக இருதயம் உள்ளது … இவ்விதமாக மனிதனின் வெளியான தோற்றத்திற்கு முரணான வகையில் [*kardia*] என்பது அவரது உள்ளான இயல்பினை முழுமையாய்க் குறிப்பிட நிலை நிற்கின்றது, … இவ்விதமாக இருதயமானது தேவன் திரும்பி நோக்குகின்ற ஒருமையாகவும், மார்க்க வாழ்வைத் தன்னில் வேரூன்றப் பெற்றதாகவும், ஒழுக்க நடத்தைகளைத் தீர்மானிப்பதாகவும் மிக மேலான வகையில் விளங்குகின்றது (Johannes Behm, "*kardia*" in *Theological Dictionary of the New Testament*).

உங்கள் வாழ்வில் தேவனுடைய சித்தம் மற்றும் தேவனுடைய நோக்கம் ஆகியவற்றிற்கு உங்கள் இருதயம் செல்லுகின்றபடியாகவே தேவனுக்கான உங்கள் விருப்பமும் செல்லுகின்றது, சரீரப் பிரகாரமான இருதயம் பாதிக்கப்படும் பொழுது, முழு சரீரம் பாதிக்கப்படுகின்றது. அது போலவே ஆவிக்குரிய இருதயமானது கடினமடைந்து, இணங்காததாகி மற்றும் வியாதிப்படுகின்ற பொழுது அது ஒருவர் தேவனுடன் நடக்கும் நடைமுழுவதையும் பாதிக்கின்றது.

உங்கள் ஆவிக்குரிய இருதயத்தில் கோளாறு எதுவும் உள்ளதா என்பதை மருத்துவர் கூடக் கூற முடியாது. உங்கள் இருதயத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு

மனிதர் ஒருபொழுதும் ஏதேனும் ஒரு கருவியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருந்தாலும், நம்மில் எவரும் இன்னொரு நபருடைய இருதயத்தினுள் ஒருபோதும் உற்று நோக்க முடியாதிருக்கும் பொழுதும் கூட, நமது சொந்த இருதயங்களை நாம் உற்று நோக்குவதற்கு தேவன் ஒரு கருவியைத் தந்துள்ளார்: அதுதான் வேதாகமம் ஆகும்.

> தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ள தாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களை யும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கின்றது (எபி. 4:12).

என்று நாம் வாசிக்கின்றோம். தேவன் இந்த அறுவைச் சிகிச்சைக் கத்தியைக் கொண்டு ஒவ்வொரு நாளும் "திறந்த இருதய அறுவைச் சிகிச்சை" யைச் செய்கின்றார்!

நமது இருதயத்தின் வியாதிப்பட்ட நிலைமையை வேதாகமம் வெளிப்படுத்துகின்ற பொழுது, அதை மறுக்காத படி நாம் எச்சரிக்கையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். பலருக்கு மாரடைப்பு ஏற்படுவது மறுப்பில்தான் தொடங்கு கின்றது: "இது எனக்கு நடைபெறவில்லை. இது வெறுமனே மோசமான கனவாய் உள்ளது அல்லது மோசமான உணவினால் ஏற்பட்டிருக்கலாம்!" உலகில் ஏற்படும் ஒவ்வொரு அழுத்தமும் நமது இருதயங்களை தேவனிடம் இருந்து புறம்பே செல்லும் படி வேண்டிச் செலுத்தப்படுவதாகவே உள்ளது. அவரது சித்தத்தைப் பொறுத்தமட்டில் இது நம் இருதயங்களைக் கடினப்படுத்தி விடுகின்றது. அவ்வாறு நமக்கு நடக்கும் வேளையில், முதலாவது நாம் அது நடக்கிறது என்பதை மறுத்து விடுவதே நாம் பெரும்பாலும் செய்யும் முதல் பதில்செயலாக உள்ளது. இருதயத்தைப் பற்றிய மிக முக்கியமான சத்தியங் களைப் போதிக்கும் அடுத்த இரு பகுதிகளுக்கு நாம் செல்லு கையில் அடுத்த சில நிமிடங்களுக்கு, மறுத்தலுக்கெதிராக உங்கள் இருயங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

# ஆவிக்குரிய இருதயம் பரிசோதிக்கப்படுகின்றது

*ஏசாயா 29*

*முதலாவதாக நாம் ஏசாயா 29க்குச் செல்லுவோம். வேதாகம ரீதியில் இருதய ஆராய்ச்சி வரைபடம் ஒன்றை எடுப்பதற்கு நாம் இந்த வசனப் பகுதியைப் பயன்படுத்த முடியும். உங்கள் இருதயத்தின் நிலைமையை நான் உங்களுக்குக் கூற முடியவில்லையென்றாலும், அந்தப் பரிசோத னையைச் செய்வதில் உங்களுக்கு உதவக் கூடிய கருவியை நான் உங்களுக்குக் காட்ட முடியும். உங்களின் இருதயம் பற்றிய ஆராய்ச்சிப் படக்குறிப்பை நீங்களே வாசிக்க வேண்டும். உங்கள் இருதய நலம் பற்றி தேவனுக்கு முன்பாக நீங்கள் நேர்மையுடன் பதில் அளிக்க வேண்டும்.*

*ஏசாயா 29 - ம் அதிகாரமானது "சாபத்தின் வார்த்தைகள்" என்ற சந்தர்ப்பப் பொருளில் தீர்க்கதரிசியினால் தரப்பட்டதாக உள்ளது. அதிகாரம் 28 முதல் 33 வரையுள்ள பகுதியில் ஒரே ஒரு அதிகாரம் மட்டும் தான் "ஐயோ" என்பதைத் தவிர மற்ற வார்த்தையைக் கொண்டு தொடங்குகின்றது:*

> *எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ (ஏசாயா 28:1அ).*

> *தாவீது வாசம் பண்ணின நகரமாகிய அரியேலே, அரியேலே, ஐயோ! (29:1அ; "அரியேல்" என்பது அநேகமாய் எருசலேமாகவே இருக்கின்றது).*

> *முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார் (30:2இ).*

> *சகாயமடையும்படி ... எகிப்துக்குப் போய் ... அவர்களை நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு ஐயோ! (31:1).*

> *இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்; பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள் (32:1; இது விதிவிலக்கான ஒரு வசனமாகும்).*

> *... கொள்ளையிடுகிறவனும் ... துரோகம் பண்ணுகிறவனு*

*மாகிய உனக்கு ஐயோ! நீ கொள்ளையிட்டு முடிந்த பின்பு கொள்ளையிடப்படுவாய்; ... (33:1).*

*இங்கு அழிவு நாள் கூற்றுக்களில் தொடர் ஒன்றை நாம் காணுகின்றோம். இஸ்ரவேலின் மார்புக்கு நேராக அழுத்தி, "அழிவு வரப் போகின்றது, எனவே விழித்தெழுங்கள்!" என்று கூறும் நீண்ட விரலை ஏசாயா பெற்றிருந்தார். இவ்வசனப் பகுதியில் அவர் அமைதியாக எழுதினார். ஆனால் ஒரு அதிகாரத்திலிருந்து அடுத்த அதிகாரத்திற்கும், ஒரு சாபத்திலிருந்து அடுத்த சாபத்திற்கும் நாம் கடந்து செல்லுகையில் மாபெரும் அளவிலான பரிவுணர்வு மேலோங்குகின்றது.*

*அதிகாரம் 29ன் மையப்பகுதியில், வசனம் 13ல் இருந்து தொடங்கி, தீர்க்கதரிசியின் வார்த்தைகள் அதிகம் தனிப்பட்டவைகளாயின. பரிசோதனையைப் பற்றி வலியுறுத்துவதற்கு முன், நாம் அறிகுறிகளைக் கவனிப்போம்:*

*(1) இருதயமற்ற ஊழியம் (வ. 13அ, இ). "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகின்றார்கள்" (வ. 13அ) என்று கர்த்தர் கூறினார். தேவன், "அவர்கள் என் முன்னிலையில் பக்தியுள்ள வார்த்தைகளைப் பேசுகின்றார்கள். அவர்கள் என்னைத் துதிக்கின்றார்கள். அவர்கள் வார்த்தைகள் சரியானதாகவே ஒலிக்கின்றன, ஆனால் ..." பக்தியுள்ள வார்த்தைகளைப் பேசுவதும், தேவனைத் துதிப்பதும் இஸ்ரவேலர்களின் ஜெபங்களைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். அதிகாரம் ஒன்றில் கர்த்தர் "நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது" (1:15) என்று கூறியிருந்தார்.*

*நாம் அதிகாரம் 29க்குத் திரும்புவோம்: வசனம் 13ன் முடிவில் கர்த்தர், "அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" (வ. 13இ) என்று கூடுதலாகக் கூறினார். இது, குழந்தைப் பருவ முதலே சபை ஆராதனைக்குச் சென்றுள்ள நம்மை, பாடல்களை மனப்பாடமாய் அறிந்துள்ள நம்மை, வேதாகமத்தின் புத்தகங்களின் மூலமாக நமது வழியை அறிந்துள்ள நம்மை, பல நிமிடங்கள் வேண்டுதல் செய்யும் ஜெபத்தை ஒரு சில வினாடிகளில்*

*தயாரிக்கக் கூடிய நம்மைப் பற்றிப் பேசுகின்றது. நமது மார்க்க பக்தியானது நமக்குச் சொந்தமானதாயிருக்கின்றதா? அல்லது அது வெறுமனே "போதிக்கப்பட்ட கற்பனையாயிருக் கின்றதா?" இஸ்ரவேலர்கள் தாங்கள் செய்வதென்ன என்பதை தங்கள் இருதயங்களில் அறியாமலேயே செய்ததுதான் அவர்களின் ஆவிக்குரிய பிணியின் முதல் அறிகுறியாய் இருந்தது.*

*(2) இரகசியமான/மறைவான பாவங்கள் (வ. 15). வசனம் 15ல், இரண்டாவது அறிகுறியைப் பற்றிப் பேசுகின்றது. அவர்கள் செய்யக் கூடாதென்று தாங்கள் அறிந்திருந்ததைச் செய்தார்கள், ஏனென்றால் ஒருவரும் அதைக் காண முடியா தென்று அவர்கள் நினைத்தார்கள். "தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து: நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ!" நாம் பிள்ளைகளாயிருக்கையில் போர்வைக்கடியில் வெளிச்சத்தை வைத்துப் படிக்கும் தந்திரத்தினால் நம் தாயார் களை ஏமாற்ற நினைத்த வேளையில் தாயார், "வாசிப்பதை நிறுத்தி விட்டு, உறங்கச் செல்!" என்று கூறுவதைக் கேட்டிருக் கின்றோம். நாம் நமது தாயை ஏமாற்றி விட்டதாக நினைத் தோம். ஆனால் அதைச் செய்வது மிகவும் அரிதாகும். மறை வாகப் பாவம் செய்யும் பொழுது பலர், தாங்கள் ஏமாற்றி விட்டதாக நினைக்கின்றார்கள். தேவன் ஒவ்வொன்றையும் காண்கின்றார்; தேவன் ஒவ்வொன்றையும் அறிகின்றார்!*

*(3) குழப்பமடைந்த தர்க்க அறிவு (வ. 16). மேற் சொன்ன வைகள் இரண்டினால் உண்டான தர்க்க ரீதியான விளைவு தான் மூன்றாவது அறிகுறியாகும்: அவர்களின் சிந்திக்கும் செயல்முறையானது பாதிக்கப்பட்டது. வசனம் 16, "ஆ, நீங்கள் எவ்வளவு மாறுபாடுள்ளவர்கள்!" என்று தொடங்குகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் "நீங்கள் குழப்ப மடைந்தீர்கள்!" என்று தேவன் அவர்களிடத்தில் கூறினார். குறிப்பாக, தேவன் ஒரு மனிதனைப் போன்றவர்தான் என்று அவர்கள் நினைக்கத் தொடங்கியிருந்தார்கள். இது, அந்தத் தீர்க்கதரிசி கூறியது போல, களிமண் குயவனிடம் இது திரும்பிப் பேச முடியும் என்ற எண்ணம் போலவே மதியீன மானதாயிருந்தது: "குயவன் களிமண்ணுக்குச் சமானமாக*

எண்ணப்படலாமோ? உண்டாக்கப்பட்டது தன்னை உண்டாக்கினவரைக் குறித்து: அவர் என்னை உண்டாக்கின தில்லை என்றும்; உருவாக்கப்பட்டது தன்னை உருவாக்கின வரைக் குறித்து: அவருக்குப் புத்தியில்லை என்றும் சொல்லத் தகுமோ?'' (வ. 16ஆ). குயவன் என்பவன் உண்டாக்கு கின்றவன், களிமண் என்பது உண்டாக்குகிறவனின் முடிவின் படியே செய்யப்படுகின்றது. இருந்தாலும், மக்களின் இருதயங்கள் கடினமடையும் பொழுது, தேவன் தங்கள் வாழ்வைக் கட்டுப்படுத்தும் உரிமை எதையும் பெற்றிருப்ப தில்லை என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

அறிகுறிகளைக் கவனித்துள்ள நாம், நோய் பற்றிய தீர்மானத்திற்கு வசனம் 13ன் மத்திய பகுதிக்குத் திரும்புவோம்: "அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (வ. 13ஆ). மக்கள் இருதயக் கோளாறு கொண்டிருந்ததாக தேவன் கூறினார்!

உங்களுக்கு இருதயக் கோளாறு இருந்தால், அநேகமாக வேறு எவராலும் அதைக் கூற முடியாது. மிகவும் பக்தியாய் ஒலிக்கும் ஜெபங்களை ஜெபிப்பவர்கள், மிக அழகாக பாடல் களைப் பாடுபவர்கள், தங்கள் வார்த்தைகளினால் நூற்றுக் கணக்கானவர்களை மயக்கிப் போடுபவர்கள் ஆகியோர் மிக வியாதிப்பட்ட இருதயம் உள்ளவர்களாய் இருக்கலாம். சரீரப் பிரகாரமான மாரடைப்பு எனக்கு ஏற்படும் பொழுது, என்னைப் பார்த்தே அதை நீங்கள் கூறி விடமுடியும், ஆனால் நான் கடினப்பட்ட இருதயத்தைப் பெற்றிருக்கின்றேனா என்பதை என்னைப் பார்த்து நீங்கள் கூறி விட முடியாது. நான் உங்களை வஞ்சிக்க முடியும், நீங்கள் என்னை வஞ்சிக்க முடியும்; ஆனால் நம்மில் யாரும் தேவனை வஞ்சிக்க முடியாது. ஏசாயாவின் காலத்திலிருந்த மக்களின் இருயங்களின் நிலையை அவர் பார்த்தார், இன்றைய நாட்களில் உள்ள ஒவ்வொரு நபரின் இருயத்தையும் அவரால் பார்க்க முடியும்.

### மத்தேயு 15

"ஆனால் அது பழைய ஏற்பாடு அல்லவா? அது யூதர்களுக் குத் தானே எழுதப்பட்டது. அது நமக்கும் நடைமுறைப் படுத்தலாம் என்று நீங்கள் எப்படி அறிவீர்களா?" என்று நீங்கள் மறுத்துரைக்கலாம். நாம் புதிய ஏற்பாட்டில் மத்தேயு 15க்குச்

*செல்லுவோம். ஏசாயா 29ஐ அந்தத் தீர்க்கதரிசி எழுதி நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, தோற்றமும் வார்த்தைகளும் பக்தியாய்க் காணப்பட்டு, இருதயம் சரியற்றதாய் இருந்த மக்களை விளக்கிக் கூற அவ்வார்த்தைகள் இன்னமும் பொருத்தமானவைகளாகவே இருந்தன. இவ்வித மாக இயேசு தம்மை இடைவிடாமல் விமர்சனம் செய்து வந்தவர்களை எதிர்கொண்ட வேளையில் ஏசாயாவின் வார்த்தைகளை அவர்களுக்கு - வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் ஆகியோருக்கு - பயன்படுத்தினார்.*

*“அப்பொழுது, எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள்” (வ. 1, 2). இருதயத்தைப் பார்ப்பதற்குப் பதில் புறம்பான தோற்றத்தைப் பார்ப்பதற்கான தலைசிறந்த எடுத்துக்காட்டு ஒன்று இங்குள்ளது:*

> *அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனை யாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத் தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது, தன் தாயையாவது கனம் பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள் (வ. 3-6).*

*“அவமாக்கி” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது “அதிகாரமுடைமை” (kuros) என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினை வடிவத்திலிருந்து வருகின்றது. இந்த வார்த்தைக்கு முன் ஆல்ஃபா என்ற எழுத்தொன்று (கிரேக்க எழுத்துக்களில் முதல் எழுத்து “a” மற்றும் “அ” ஆகியவற்றிக்கிணையானது) உள்ளது; இது un மற்றும் non என்ற நமது முற்சேர்க்கைச் சொற்களுக்கிணையானதாகும்; இது வார்த்தையை எதிர்மறையாக்குகின்றது. ஆகையால் இயேசு,*

"உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அதிகாரமற்றதாக்கி வருகிறீர்கள்" என்று கூறினார்.

தொடர்ந்து இயேசு: ''மாயக்காரரே'' (வ. 7) என்று கூறினார்! கடைசியாக நீங்கள் எப்பொழுது யாரேனும் ஒருவரை "மாயக்காரனே" என்று சொன்னீர்கள்? அநேகமாக உங்கள் வாழ்க்கையில் இவ்வாறு நடக்க ஏற்புடைய வேளைகள் இருந்த போதிலும் இவ்வாறு நடக்காமல் இருந்திருக்கலாம். மற்ற மக்களை நாம் மாயக்காரர் என்று அழைப்பதில்லை என்பதை ஒரு சட்டமாகவே நாம் கைக் கொள்கிறோம், ஏனென்றால் அவர்கள் மாயக்காரரா அல்லவா என்று நாம் உறுதியாய் அறிய முடிவதில்லை - ஆனால் இயேசு அவ்விதமாய் அறிய முடிந்தது. இயேசு தம்மை விமர்சித்தவர்களின் இருதயங்களுக்குள் பார்த்து, ''நீங்கள் மேம்போக்கான விஷயங்களினால் பிடிபட்டிருக்கின்றீர்கள், உங்கள் பாரம் பரியங்களைக் கடைப் பிடிக்காத மக்களை நீங்கள் விமர்சிக் கின்றீர்கள்; ஆனால் தேவன்மேல் உண்மையான அன்பு உங்களுக்குள் இல்லை. அழுகிப் போன, வியாதிப்பட்ட இருதயமுள்ளவர்களாய் இருக்கின்றீர்கள்" என்று கூறினார்.

நாம் ஏசாயா 29ல் பார்த்த வசனங்களை மத்தேயு 15:7ஆ-9ல் இயேசு மேற்கோள் காட்டினார்: "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனை களை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்.'' அந்த மனிதர்களைப் பரிசோதித்த மாபெரும் வைத்தியர், பின்வருமாறு நோய் பற்றிய முடிவைத் தந்தார்: "இதைப்பற்றி நீங்கள் ஏதாவது செய்யாதிருந்தால், உங்கள் நிலை ஒரு முடிவுக்கு வந்து விடும். நம்பிக்கையே இல்லை. உங்களுக்கு இருதயக்கோளாறு உள்ளது, உயிர் பறிக்கும் மாரடைப்பு நேரக் கூடிய விளிம்பில் நீங்கள் இருக்கின்றீர்கள்!"

இயேசு பரிசேயரை விட்டு, அங்கிருந்த மற்றவர்களிடத்தில் திரும்பி, "நீங்கள் கேட்டு உணருங்கள் வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்றார் (வ. 10ஆ, 11). எந்த

ஒரு புத்தகக் கடைக்காவது நீங்கள் சென்றால், வாய்க்குள் போகின்றவை பற்றிய - சமையல் புத்தகங்கள், சத்துணவுப் புத்தகங்கள் முதலிய - தொகுதிகள் ஏராளமானவற்றை நீங்கள் காணலாம். ஆனால் வாயிலிருந்து வெளியே வருபவை என்ன என்பது பற்றிய புத்தகங்களை நீங்கள் காண்பதில்லை. வாய்க்குள் போகிறது என்ன என்பது முக்கியமானதாக இருக்கின்றது, ஆனால் வாயிலிருந்து புறப்பட்டு வருவது என்ன என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது - ஏனென்றால், நமது இருதயத்தில் இருப்பதை நமது வார்த்தைகள் வெளிப் படுத்துகின்றன (லூக். 6:45).

வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் ஆகியோரின் உள்ளான இருதயங்களில் ஆழமாய் உற்று நோக்கியிருந்த இயேசு, "உங்கள் பிரச்சனையானது ஆராதனைப் பற்றிய பிரச்சனையைக் கொண்டதாக இல்லை; உங்கள் பிரச்சனை யானது அடிப்படையில், உபதேசம் பற்றிய பிரச்சனையைக் கொண்டதாகக்கூட இல்லை; உங்கள் பிரச்சனை இருதயத்தின் கோளாறுதான்" என்ற உண்மையில் கூறினார்.

மக்கள் உண்மை நிறைவுடன் ஆராதனை ஊழியத்தில் கலந்து கொள்ளவில்லையென்றால், அது வருகையின் பிரச்சனையாய் இராமல், அதிகமாய், இருதயத்தின் பிரச்சனை யாகவே இருக்கும். நாம் கொடுக்க வேண்டிய முறைப்படி கொடுக்காமல் போகும்போது நான் கவலையடைகின்றேன். இது சபையால் செய்யக் கூடிய செயல்களை மிகவும் பாதிக் கின்றது. இருந்தாலும், வாரத்திற்கு வாரம் நமது காணிக்கைகள் குறையும் பொழுது, நாம் கொடுத்தலின் பிரச்சனையைப் பற்றிப் பேசுவதில்லை. நாம் இருதயத்தின் பிரச்சனையொன் றைப் பற்றியே பேசுகின்றோம். நம்மால் முடிந்த அளவு நாம் மக்களுக்குப் போதித்து, ஞானஸ்நானப் படுத்தாதபோது அது என்னைக் கவலைப்படுத்துகின்றது. இருந்தாலும் நாம் மறுபடி யும் ஆத்தும ஆதாயப் பிரச்சனையொன்றைப் பேசவில்லை, நாம் இருதயத்தின் பிரச்சனையொன்றைப் பற்றியே பேசுகின்றோம்.

## முடிவுரை

உங்கள் இருதயத்திற்குள்ளாக நான் உற்று நோக்கவோ

*மற்றும் என் இருதயத்திற்குள்ளாக நீங்கள் உற்று நோக்கவோ வழியெதுவும் இல்லை. முடிவில் அது ஒவ்வொருவருக்கும் மற்றும் தேவனுக்கும் இடையிலான ஒரு விஷயமாகின்றது. எனக்குள் உள்ள இருதயத்தின் வடிவென்ன? உங்களுக்குள் உள்ள இருதயத்தின் வடிவென்ன? நாம் அறிந்து கொள்ள உதவி செய்யும் இருதய சோதனை/ஆராய்ச்சிக்கான கேள்விகள் சில பின்வருமாறு:*

*1. ஆராதனையானது என்னைப் பொறுத்தமட்டில் ஒரு சடங்காச்சாரத்தை விடச் சற்று அதிகமானதாய் ஆகியுள்ளதா?*

*2. ஜெபம் என்பது எனக்கு, அர்த்தமற்ற வார்த்தைகளின் கோர்வையாக, வாயினால் செய்யும் ஆராதனையாக மட்டும் ஆகியுள்ளதா?*

*3. எனது தேவைகளைப் பொறுத்தமட்டில் தேவன் அந்நியமாய்த் தூரப்பட்டு, அணுகாத வகையில் காணப்படுகின்றாரா?*

*4. வெளிப்படையான/புறம்பான விஷயங்களினால் நான் அதிகமாய் ஆக்கிரமிக்கப்பட்டு, அவைகளின் உற்பத்தி மூலத்தைப் புறக்கணித்திருக்கின்றேனா?*

*5. தேவன் மற்றும் அவரது வசனத்தின் அதிகாரத்திற்கு மேலாக நான் எனது சித்தத்தை உயர்த்தியிருக்கின்றேனா?*

*6. துன்மார்க்கமானது எனது இருதயத்தில் சகித்துக் கொள்ளப்பட்டு - விளையச் செய்யப்படவும் - உள்ளதா?*

*7. இதைப் பற்றி கவலைப்படக்கூட இயலாத அளவுக்கு இவ்வழியில் நீண்ட நாட்களாய் நிலைத்திருக்கின்றேனா? எனது இருதயமானது இன்னும் கடினமாக மாறியுள்ளதா?*

*இரத்தத்தை உங்கள் உடல் முழுவதிலும் பீய்ச்சக்கூடிய குழிவான அந்த தசையைப் பற்றி (இருதயத்தைப் பற்றி) மீண்டும் ஒருமுறை நினைத்துப் பாருங்கள். உடல் வாழ்க்கை யாவும் அந்தச் சிறு தசைக்குள் மூடி வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது, வேதாகமத்தின் இருதயத்தை, உங்கள் ஆவிக்குரிய வாழ்வின் மூலாதாரத்தை வியாதிப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஆவிக்குரிய மரணமென்பது, அதைப் பற்றி தேவனுடைய உதவியுடன் நீங்கள் ஏதாவது செய்யாவிட்டால் நிச்சயமாய் ஏற்படக்கூடியதாய் இருக்கின்றது.*

*உங்களின் கடினப்பட்ட, வியாதிப்பட்ட இருதயத்தை*

*தேவன் எடுத்து அதைப் பிசைந்து விட்டு மறுபடியும் உயிரடையச் செய்ய முடியும். கிறிஸ்துவின் இரத்தமானது உங்கள் இருதயத்தைச் சுத்திகரித்து மறுபடியும் பரிசுத்தமாக்க முடியும். இருந்தாலும், இது ஒப்புக் கொடுத்தலில்தான் தொடங்குகின்றது. நீங்கள் கர்த்தருக்கு உங்களையே ஒப்புக் கொடுப்பீர்களா? நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால் இன்றே ஏன் அதைச் செய்யக் கூடாது? (மாற். 16:16; அப். 2:38)? நீங்கள் கர்த்தரிடமாய் மறு ஒப்புரவாக வேண்டுமென்றால், இப்பொழுதே அதற்கு ஏற்ற காலம் ஆகும் (அப். 8:22, 23; யாக். 5:16).*